உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

G: 1028

# திருப்போரூர்ப்

# பிரணவசைலமாலை.

இது

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

சிவஸ்ரீ-கலியாணசுந்தரயதீந்திரசுவாமிகள்

மாணவர்

பண்டிதரத்தினம்

குகஸ்ரீ-புழலை-திருநாவுக்கரசுமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு

இராயபுரம்

ஸ்ரீமான்-பொன்னுவேலுகிராமணியாரவர்களால்

சென்னை

பென்ரோஸ் அச்சு யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

பிங்களஹ ஆனிமீ

1917.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

---

சென்னை - பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
வித்துவான்
ஸ்ரீமத்-பூவை-கிருஷ்ணசாமிமுதலியாரவர்களியற்றிய

## அறுசீர்விருத்தம்.

பார்பரவும் பாவலர்முன் பண்டிதராத் தினமென்னும் பாவ லானற்
சீர்பரவும் புழலைநகர்த் திருநாவுக் கரசுதமிழ்ச் செல்வ னெங்குங்
கார்பரவும் போரிநகர்க் கண்ணிலவுங் கந்தவேள் கருணை மேவி
ஏர்பரவு மாதிப்ர ணவவசைல் மாலைமகிழ்ந் திசைத்திட் டானால்.

---

ஷை கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத்-ஆ. சிங்காரவேலுமுதலியாரவர்களியற்றிய

## எண்சீர்விருத்தம்.

குவலயத்திற் கணியெனலாங் குன்றத் தண்மி
கூர்தருமா மயிலகவும் போரூர் மாட்டங்
கவலமொழித் தருட்டரவாண் டமர்ந்து நிற்கு
மங்கலமாம் பிரணவத்தின் மாலை சொற்றான்
தவந்தருநற் றரணிபுகழ் புழலிற் றோன்றித்
தருவெனவே வேளாளர் மரபில் வந்தோன்
நவந்தருபண் டிதராத்ந மென்னு நாம
நற்றிருநா வுக்கரசென் னலம்பெற் றோனே.

---

திருப்போரூர் மஹாகும்பாபிஷேகத்தன்று விநியோகிக்கப்பட்டது.

7026

சிவமயம்

# திருப்போரூர்ப்
# பிரணவசைலமாலை.

காப்பு

வெண்பா.

வேரிகமழ் பூஞ்சோலை மேலோங்கிச் சூழ்ந்ததிருப்
போரிநகர் நாப்பண் புரிந்தமரு—நேரில்
பிரணவசை லற்றுதிப்பன் பேசரிய துங்கப்
பிரணவமு கத்தனருள் பெற்று.

## நூல்.

### எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

உலகெலாம் புகழு நிகரிலாப் புலமை யுத்தமக் கவிஞர்க டம்முன், அலகிலா நினது பெரும்புகழ் தன்னை யறிவிலே னென்னென விசைப் பேன், நிலவிடுங் கயவாய்க் கருளிய நினது நிலைமைகண் டெக்குநா ளுனதோ, தலமுணர்ந் தேத்த வருள்செயும் பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (க)

திருவிளை யகனுந் திசைமுக ஞதி சிறுமைசெய் கயமுகற் கஞ்சித், திருவிநா யகனாற் றீர்ந்திடச் செய்து திருவருள் சுரந்தளித் தவனே, அருமையோ டென்ற னடியிணை சார்ந்தங் கருச்சனை புரியுநா ளுளதோ, தருநில முயர வளர்ந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

உறுகணே குடிகொ ளவுணரைச் சாடி யும்பரைப் புரக்குமா றெங்கள், அறுமுகச் சிவனைத் தந்தவெம் பரனே யறுவகைக் குற்றமு நீத்து, நறுமைசெந் தமிழு நல்வினை யொழிவு நண்ணிட வருளுநா ளுளதோ, தறுகணைக் களைந்தாண் டிடவளர் பிரணவசைலனே போரிவாழ்பவனே.

நக்கனு முனக்கங் கவியிலை யென்றே நவின்றபேர் செருக்கினை யடைந்த, தக்கனொ டுறைந்த தேவர்க ளியாருந் தண்டனைக் குட்பட வெண்ணி, மிக்கதோர் வீர பத்திரற் றந்தோய் மெய்யிலேற் கருளுநா ளுளதோ, தக்கவர் விரும்பிப் புகழ்ந்துறை பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (௪)

அடலுடன் செருக்கான் மாலய னிருவ ரடிமுடி தேடியுங் காணாத், திடமிகு மழலி னுருவினுக் காற்றாத் திகைப்புறு மவர்க்கருள் புரிந்த, மடமயி லிமயக் கொடியிடத் தமரும் வரதனே யருளுநா ளுளதோ, தடமதில் சூழ நீண்டுயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫)

மிருதுவின் மேம்பட் டுயர்தரு முடலின் மினுக்குவார் தம்மின மகிழ்வால், வருதுய ரகல வருந்துபு மாக்கண் மயக்கினி லியங்கிடா துன்னைக், கருதுமென் மனத்துட் கனிவுட னிருந்து கடையனுக் கருளுநா ளுளதோ, தருபெருங் கருணை நிலவிடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௬)

அகத்தினின் மிகுத்தோர் சரண்புகுஞ் சைவ சமயசாத் திரவழி யொழுகு, மகத்துவ முடையோர் மனத்துய ரகன்றோர் மாலய னாதிய ரேத்தச், சுகத்தினை முழுதுந் தந்தவர்க் கியைந்த சொற்பத மருளுநா ளுளதோ, தகத்திரு விமானத் தினிதமர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௭)

அருவருப் புடைய விரகமே வீட்டா லரிவையர் மனங்கவர்ந் திடு புன், பருவரன் மிக்க வலையினிற் சிக்கும் பாவியேற் கிடையரு ளென்றுங், கருவழிக் கியங்காக் கருணைகூர் செல்வக் கதியினி லுய்க்குநா ளுளதோ, தருநின தடிக்கீழ்த் துதிவளர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அ)

சுடர்விடு சடிலத் தவிர்மதி யுய்க்குஞ் சுரநதி தவழ்ந்திழி நுதற்கண், இடர்புரி விடமுண் டமர்மிடற் றண்ணை விரும்புணைக் கழலிணைக் கன்பாந், தொடர்பினை யார்க்கும் வலியுறுத் திடுநீ தொல்வினை களையுநா ளுளதோ, சடர்களை யறிஞராக் கிடவுயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௯)

பத்தவ தாரஞ் சிவனடி மறவாப் பத்திசெய் தேத்துமா லென்னும், உத்தம புருட னித்தமும் வழுத்த வுரிமைபெற் றுன்னை வுரைக்கும், அத்தனை நூலு மறிவுறுத் திடநீ யகத்தினி லருளுநா ளுளதோ, சத்தியந் தவறா வலம்புரி பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௰)

மால்விடை யோயுன் மலரடிக் காளாய் மனமுவந் திறைஞ்சிடு மோர்நாள், மால்விரை யலர்தண் சகத்திரத் தொன்று மறைந்திடத் திருக்கணி லொன்றைக், கால்விழி விடச்சக் கரமரு ளுன்றன் கருணையைப் பொழியுநா ளுளதோ, சால்புறு தவத்தர் தவத்துதி பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௰௧)

திருவருள் சுரக்கும் பேற்றினை யடையச் சிறந்தநற் பக்குவர் தம்முன், குருமுக மாய்வந் தாண்டிடு நினது குரைகழ றனைமற வாது பெருமிதங் கொள்வா ரினத்துடன் சேராப் பேயனேற் கருளுநா ளுளதோ, தருவளர் பூந்தார் மணமலிர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௰௨)

அருஞ்சுனை வழிநீர் வயலெலா நிரம்பி யணிபெற வோங்கிய பைங் கூழ்ப், பெருஞ்சுமை நாளு மளாவிய வான்றோய் பெற்றியா லேத்தி வாழ்ந் துய்ய, வருஞ்சுக மென்றும் வளர்ந்திடுந் தெய்வ வளநக ரடையு நா ளுளதோ, தருஞ்சிவ போகந் தனையருள் பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (௰௩)

அரும்பிய முகைபோற் கருஞ்சிறு நுதியா ரணங்குசெய் தனத்தினிற் படிய, விரும்பிய மனத்தா லிடையறா துழன்று விலங்கினுங் கடையா யலைப்புணத், திரும்பிய வவர்தங் கூட்டற வொழியத் திருப்பத மடையுநா ளுளதோ, தரும்பிறப் பவத்தை யொழித்தருள் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௰௪)

கருமமே நினைந்து கழலிணை கருதல் கருத்தினுக் கனுதினம் விழிக்குச், சருமமே தாங்குநின் காட்சியைக் காண்குறல் சரணிணை தொழுதலாங் கைக்கு, மருமமீ தியற்றென் றுணர்த்தினு முணரா மதியிலேற் கருளுநா ளுளதோ, தருமமே மிகுநற் றலத்துலாம் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௰௫)

நாடகப் பிராந்தி யாகுமிவ் வுடலை நம்பியே சதமெனத் திரியும், ஆடகப் பணிக ளணிமுலைக் கலவிதோ யகத்தினைத் திருத்தியே யென்றும், சூடகச் சோதி யாகநின் றொளிர்கழற் றுணையெனப் பற்றுநா ளுளதோ, தாடகக் கல்வடத் தமர்ந்தருள் பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (௰௬)

சகமுழு தொருங்கே யிணையடி மலரைச் சார்ந்தவர் வணங்கியே நாளும், புகலருந் தெய்வப் புலமைசான் மிக்க புண்ணியச் சிதம்பர முனிவன், நிகரிலாப் புகழ்பெற் றிருந்திடச் செயுநின் னடிநிழல் காணுநா

ளுளதோ, சகலரு மேத்த வுயர்ந்தெழு பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (மஎ)

மறுமையின் மாட்டு வளர்பவ மனந்த மகிழ்வுட னியற்றியே நாளும், வெறுமைகொண் டுலவும் பேதையேன் றனக்கு விதித்ததோர் மதியினை விளக்கிப், பொறுமையோ டினிமேற் போற்றிவாழ்ந் துய்யப் புகலிட மருளுநா ளுளதோ, சறுவமு நிறைந்து நின்றிடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (மஅ)

அவத்தையே மீண்டு மனுசரித் திடாதிங் கதிவிர தத்தொடு மேலாஞ், சிவத்தையே பேணித் திருவருட் செல்வச் சிறப்பினின் மேம்படு வார்கள், நவத்தையே வேண்டி நயந்துரை யாடு நாட்டம தருளுநா ளுளதோ, தவத்தினர் மிகுபேர் வதிதரும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (மக)

இருபா னிரண்டு மங்கலச் சொல்லா லிசைத்திடுங் கவிகளா லேத்தி, இருபா றொன்று மங்கலப் பொருள்க ளியைந்திடும் பொருளொடும் வந்து, கிருபா கரவென் றபிடே கஞ்செய் கிளர்செயல் காணுநா ளுளதோ, தருமாத் துமாக்க டனித்துறை பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உ0)

நிசிபக லந்தி நிமிடமு மறவா நெறிபிற ழாதரன் கழலை, விசிரகை வரையுங் கைவிடா தவர்தீம் விருப்பினில் வெறுப்புறு தென்றுஞ், சசிகர மோடு வாழுநர் துடக்கிற் றோய்வுற வாழுநா ளுளதோ, சசிதவழ் பொதும்பர் வளர்ந்தெழு பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உக)

நிதிபதி யென்னக் கனதன மளிக்கு நிகரிலாப் புலமைவந் துய்க்கும், பதிபசு பாச நிச்சய முணர்த்தும் பரகதி யுதவுமெஞ் ஞானத், துதிவளர் நினது திருவடிக் கமலச் சொற்சுவை பெருகுநா ளுளதோ

சதுர்முகன் முதலோர் வலம்வரும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உஉ)

இந்துறு நுதலா ரேந்திழை மடவா ரிருந்தனக் குவட்டினிற் கேங்கிச், சிந்தனை முழுதுந் தந்தவர் தொழிலைச் சிரம்வகித் துழன்றிது காறும், நொந்துவந் தடைந்தே னென்பிலே னெனநீ நுவலிடா தருளுநா ளுள தோ, தந்திகந் தனைத்தந் தாண்டிடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உங)

பஞ்சின் மெல்லடியுங் கொடியிடை நுடங்கும் பைந்தொடி நுதலும் வரன்றோய், அஞ்சன மூட்டிங் கண்ணொளி பரப்பு மழகொழு கானன மதினோர், மஞ்சுகை யார்ந்த செவிநிழற் படிந்த மதியினைத் தவிர்க்கு நா ளுளதோ, தஞ்சமென் றெவருஞ் சரண்புகும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உச)

மண்டலத் தவரும் விண்டலத் தவரு மனமுவந் தேத்துவான் றெய்வ, முண்டகத் தவனு நான்முகத் தேவு முனிவரர் சித்தரா தியருங், கொண்டநின் விரதத் திளைத்திடுஞ் செயலின் குறிப்பறிந் துய்யுநா ளுளதோ, தண்டமிழ் வளரும் பதியெனும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உரு)

பிடியன நடையுங் குயிலன மொழியும் பிறங்கிடுங் குவிமுலைக் கதிருங், கடிதடத் தோய்வுங் கருதியே யுலகிற் கனம்படா தேங்குவா ரினத்துட், பிடிபடா திருக்கும் பெரியவ ரூறவே பெறற்குநீ யருளுநா ளுளதோ, சடிலநேர் படருங் கொடிதவழ் பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (உசு)

ஊருணி யெங்கு மிகுத்துயர் வளனு முந்துபூம் பொழிலுலாஞ் செறிவுஞ், சாருமா லயமுஞ் சார்ந்தவர்க் கிடர்தீர் சண்முகத் தெந்தை யைத் தந்த, காருணி யாகுநின் கழலிணை மறவாக் கருத்தெனக் கருளுநா

ஞானதோ, தாருகு வழிதே னனைந்திழி பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உஎ)

தெங்குதண் டடவை யெங்குமா மரங்க டெளிபுனன் மருங்கினி லோடிப், பங்கய வாவி தங்கிய வனங்கள் படிந்திடத் துஞ்சுக்கெனக் கயல்பாய், மங்கையர் மருளு மயர்வினுக் கஞ்சி மாழ்குவேற் கருளுநா ஞானதோ, தங்கநற் கிரியே யெனவுயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உஅ)

மலைமகண் மனைவி மருமகள் குறத்தி மகிழிடஞ் சுடலைநல் லெருது, தலைமகன் யானை சரவண னிளவல் சருவிட மடுதொழின் மற்றும், அலைபடு பொருள்கள் பித்தனென் றிகழ்பே ரடையுநீ யருளுமா றெவனே, தலைபடு மாறுத் தவருறை பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (உகூ)

முப்பா னிரண்டி னறமெலாம் வளர்த்த முக்கணிக் குவந்திட மளித்துஞ், செப்பார் மூலைத்தழும் புறக்குழைந் திடுமெய் திருவினுக் கனுதின மாளாய், எப்பா தகரும் வந்தடி பரவ விரிதலாற் காணுநா ஞானதோ, தப்பா துனைத்துதித் திட்வரும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩0)

விருந்தையின் மயலாற் சாம்பரிற் புரண்மால் வெருவினை யகற்றிடு மூவா, மருந்தினை யசுரர் குலமற வொழித்து வானவர் தமைமகிழ் விக்குங், குருந்தினைத் தந்தருள் குணநிதி யென்றுன் குரைகழல் வழுத்துநா ஞானதோ, தருந்துய ரகல மருந்தருள் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩க)

இமிழ்திரை யலைப்புண் டிருங்கரை பரப்பு மெழின்மணிச் சுடர்விடு மாங்கே, அமிழ்தினு மினிய குயின்மொழி மிகுமிந் தனையநின் முகத் தினிற் படியச், சிமிழ்குவி முலையார் பேரொளி வீசுந் திமிரம தகற்று நா ளுளதோ, தமிழ்மணங் கமழுந் தலமெனும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௨)

முடையெறி புண்ணீர் வடிசீ யுகுக்கு முற்படு பவக்குழி மூழ்த்தத், தொடையலங் காரக் கச்சணி பாசத் தூன்புறுந் தனத்திரு புணையால், இடையறுக் கட்டுண் டிழுத்திட மயங்கு மெளியனுக் கருளுநா ளுளதோ, சடைமுடி யலர்பூந் தேனிழி பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௩)

சாமர மிருபா லோய்விலா தசைக்கத் தழங்குர லோடுநல் லடியார், தீமணி நிறைசொற் றுதிநிரம் பியதோர் செறிநறும் புகையுலா நினது, தேமமர் தளியு ளடிபணிந் தேத்துந் திகழளி செலுத்துநா ளுளதோ, தாமரைத் தடஞ்சூழ் சுனைமிகு பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௪)

மனுமுறைப் படியே யாசினைக் கோடல் வழக்கென மகிழ்வுறுந் தனக்கோர், தனுசனென் றுணராத் தகைமைசா னீதி தன்வழி நிறுத் துவான் வேண்டிப், பனுவலுக் கடங்காப் புகழ்நிலை நாட்டுநின் பதமல ரருளுநா ளுளதோ, தனுதவன் முதலோர் வழுத்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௫)

தொழுகுடர் நோய்கா மாலைநீ ரிழிவு துயர்கய ரோகமுஞ் சூலை, பழுதுறுங் காசம் வாதமா தியவும் பகரொணா நினைவலம் வருமுன், வழுவுட னொழிக்குங் கருணையங் கடலே வகையறிந் தேத்துநா ளுளதோ, தழுவிய வுமைக்குக் குழைந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௬)

மூழுதுணர் புலவன் புலவிதீர்த் திடுவான் மொய்குழற் பரவைவா சற்குக், கழுதுகண் படுக்கு நள்ளிருட் போது கவின்பெறுந் தோழமைக் கிரங்கி, வழுவிலாத் தூது செல்லுநின் னடிக்கீழ் மனம்பதிந் திறைஞ்சுநா ளுளதோ, தழுதழுப் பேறத் துதித்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௭)

வழுதிபாண் டியற்கு மாவல ளுகி வந்திபாற் படுகரை யடைக்கப், புழுதியைச் சுமந்து பிரம்படி பட்ட போதினி லவ்வடித் தழும்பு, நழுவிடா தெவர்க்கும் பட்டதென் றரற்று நயமதை தேருநா ளுளதோ, தழுவிய மாது மிகமகிழ் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௮)

பிரியநந் தனனை யட்டிடற் குவந்த பெற்றியாற் பெற்றமேல் வருவாற், கரியநற் பெரிய தொண்டனென் றும லமர்சிறுத் தொண்டரென் றறைந்தார், பெரியவர் சிறிய ரென்றுரை யாடும் பெட்பினைப் பேணுநா ளுளதோ, சரியுடை யோரும் வலம்புரி பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௯)

அட்டமா சித்தி யடைவுடன் பெற்றிங் கடைவரே யெனினும் வான்றோய், அட்டமூர்த் தங்க ணீயென யருவா யுருவமா யமைந்தொளிரடிக்கீழ், இட்டமோ டிறைஞ்சி வழிபடு மவர்க்கே யெதிர்பட வருளுநா ளுளதோ, வட்டமால் பரவ வளர்ந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௪0)

நாற்பா னிரண்டு சத்திக ளாலு நானில மெலாம்புரந் திடுமு, னேற்பா டதனை வியந்துரை யடியா மிணைமலர்த் தாளினைப் பழிச்சும், நூற்பா லுணர்ந்து வழிபடு வேற்கு நோன்பது காணுநா ளுளதோ, தாற்றூல் விளங்கு தண்டலைப் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௪௧

பஞ்சதாண் டவஞ்செய் நினதரு ணடனப் பான்மைகண் டவர்க்கெ லாம் வலிதில், அஞ்சலென் றபய மங்கையிற் காட்டு மருட்பெருஞ் சோதியங் கடலே, தஞ்சமென் றடையு மென்வினை களையத் தாமத மேனுனக் கருளே, பிஞ்சகஞ் சிறிதும் வழங்குருப் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (சஉ)

நாரணன் முதலோர் நாடொறு மறவா நன்மலர் சொரிந்துநின் னடிக் கீழ்ப், பூரண கடாட்சம் பெற்றுயு மாறு போற்றுவார் தமைப்புரந் திடுநின், காரண மறியாக் கலங்குறு மடியேன் கடைப்பிடித் தொழு குநாளுளதோ, தாரணி யெல்லாம் வியந்துறை பிரணவ சைலனே போ ரிவாழ் பவனே. (சங)

கிழவனாய் வரவு மழுதினை யளிக்கக் கிளரொளிக் குமாரனாப் பின் னர்க், குழவியாய் நங்கை மடித்தவழ்ந் திருந்து குலாவிய போதவ ணீங் கி, மழவிடை மீது வந்தருள் புரிந்த வகையினை யுணருநா ளுளதோ, தழலுருவாகி யமர்ந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே (சச)

கானவர் மகளுங் கரியவன் மகளுங் கலந்துற வாடியே யிருமூன், றானன முடையோ னிருபுடை சூழ வகமகி ழாகவே நாளும், ஊன மி லுனது புகழினை விரிக்கு முளவறிந் தொழுகுநா ளுளதோ, தான மே மிகுநற் றலமெனும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (சரு)

மனத்துய ரகலத் தினைத்துணை யேனும் வழுத்திட வகையினை யறி யா, இனத்துடன் மகிழ்வோ டினிதிருந் தழுங்கு மியல்புறு மடியனுக் கென்றுந், தனத்தியர் வழக்கி லடிபடுந் துயரைத் தணந்திட வருளுநா ளுளதோ, சனத்திரள் கூடி யடிதொழும் பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (சசு)

வேதியர் நிறைந்த வீதிக டோறும் விமலனை யிடையறு தென்றும், பேதியா திருந்து வழிபடு மவர்பாற் பெற்றிடும் புலமைசான் மிக்க,

சோதிநா யகற்குத் தொண்டுசெய் வார்நந் துணையெனப் பற்றுநா ளுளதோ, சாதிமல் விகையா தியபடர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௪௭)

பாரத முடிய விருவரைப் பிரித்துப் பகாருஞ் சமரினை விளைத்துச், சாரதியாக வஞ்சனை பலவுஞ் சமைத்திடு மான்மகற் குவந்த, பாரதி துதிசெய் பதமல ரிறைஞ்சும் பக்குவ மருளுநா ளுளதோ, தாரதி வாச மிகவுயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௪௮)

ஐம்பான் மூன்று தீர்த்தங் கடோறு மாடிய பலனெலா மொருங்கே, கைம்மா வுரியைப் போர்த்திடு நினது கவின்சர வணச்சுனை யாடிப், பெம்மா னெனவே கருதுநின் கழலின் பெருமைகண் டிருக்குநா ளுள தோ, தம்மா தொடுவலஞ் சூழ்ந்துயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௪௯)

கண்ணிரண் டினது கவின்பெறு முருவமே கண்டு மெய்ப்படு வாக்கால், உண்ணிறை காதலோ டேத்துஞ் செவிப்புல னுயர்தரு புகழினைக் கேட்கும், வண்ணநின் கோயில் வலம்புகு காலும் வாய்த்திட வருளுநா ளுளதோ, தண்ணளி பாடும் பொழிலுலாம் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫௦)

பெரும்புகழ் வாய்ந்தும் பெறற்கரும் பேறெலாம் பெற்றும் பிறிதிலா மேன்மை, வரும்புணை யடைந்துங் கதிபெற லரிதாம் வழக்கினை நினைந்தடி பரவும், அரும்புணை பற்றி வதிதரு வார்த மடியினைப் பேணுநா ளுளதோ, தரும்புலை யொழிப்பார் நிதம்பணி பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫௧)

புனைபிறை மடவா ரிதழமு தருந்திப் புன்னகைக் கெளிதினி விரங்கி, நனைமிகு கலசக் குவிமுலை கறுவ நடலைசெய் கடிதடத் துய்த்து நினைவிலா தயரு மடமையை யகற்றி நினைத்தொழ வருளுநா ளுள

தோ, தனையறிந் தவர்க ணிதமுறை பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫உ)

நற்றுணை யாகு நினதடி மறவா நற்புகழ் நாட்டுவான் வேண்டிக், கற்றுணைப் பற்றிக் கரையினி லேறுங் கவியர சானசற் குருவின், முற்றுணர் துதிகொள் பாக்களாற் பரம முடிவிட மறியுநா ளுளதோ, தற்பத மறிவார் வியந்துறை பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫௩)

மருந்தினை யுண்டு பத்திய மிலாத மதியிலாப் பாமரர் தமைப்போல், அருந்திய புலாலைப் பிணமென நினையா தாவிமன் னுயிர்க்கெலாம் பொதுவாய், பொருந்தில ரிழிபட வதைத்திடு நமனைப் புகவிடா தருளுநா ளுளதோ, தருந்தல முத்தி யெனவுயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫௪)

காலினிற் கடுமுட் டைக்குமுன் வருந்திக் கண்ணினீ ருகுத்திடுங் கயவர், கோலிய மறத்துட் சிறந்திடுங் கொலைக்குக் குறும்பிடி யேந்தியே நிற்கும், போலிகட் கென்று மிணைபடா திருக்கும் புத்தியைப் புகட்டுநா ளுளதோ, சாலியோ தனமீந் துயர்த்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫௫)

கழுமுனைக் கிரையாஞ் சமணரை யொழித்துக் கழுமலக் குருந்தினை வேதச், செழுமைசா னீற்றுப் பதிகமொன் றினையுஞ் செபித்திடக் கதிதரும் வாய்மை, முழுதுணர் புலவர் வழங்கிய முணரா மூடனேற் கருளுநா ளுளதோ, தழுதழுப் புறநின் றேத்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫௬)

அதிவிரை வாக நினதடிக் கமல மணைந்திட முயன்றிடு மடியார், துதிவிரை கமழும் பெற்றியா லார்க்குந் துப்பெழ வரும்பெரும் பயனைக், கதியெனத் தலைமேற் கொண்டெழு மதியிலாக் கசடனேற் கருளுநா ளுளதோ, சதிபதிக் கென்றும் விழாவுயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௫௭)

வரைபக வெறிந்தோ னிறைமகன் வடுகன் மாதவன் கையினிற் பிறந்த, உரைபடு சிறுவன் வெஞ்சிலைச் செல்வ னேங்குமா தவத்தரோ டினிய, பரைவள ரிடங்கண் டணுகுருதடியேன் பரகதி யடையுநா ளுளதோ, தரைமிகு செல்வந் தரித்துயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (ருஅ)

அறுபான் மும்மை நாயனார்க் குரிய வவாவ ரிருப்பிடஞ் சென்றும், பெறுவார் பெருமை தமைவிளக் கியநின் பெற்றியா லுற்றநோக் கிடுமென், வெறுவாய் தனக்குக் கதிதரா விடினும் விதிவிலக் கறியுநா ளுளதோ, தறுவா யறிவார் சூழ்தரும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (ருக)

வாத்திய முழங்க நாத்தழும் பேறமாகதர் பேரொலி யோடு, பாத்திய நிறைந்த சாத்திர நூல்கள் பயிலுமவ் விடந்தனைத் தேடித், தோத்திரம் புரிய வகையிலாத் துரிசறத் தொல்வினை யகற்றுநா ளுளதோ, தாத்திரி யோங்க வளர்ந்துயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.(சுO)

மாலுக வடியி லமர்கய முகனை வழுத்திட வருமடி யார்கள், பாலுகச் சோதி யெழுபுகை செல்கார்ப் பரப்பென மருண்டினி தோடி, வாலுக நாப்பண் மயங்குவார் தம்முன் வதிதர வருளுநா ளுளதோ, சாலுக வைசே டியருறை பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

அருவமா யுருவா யனுதியா யார்க்கு மகத்திருள் கடியநின் றருளும், பெருமநின் னடியார் வகுத்திட முடியாப் பிரபலக் கொள்கையை நோக்கப், பருவரற் கிடஞ்செய் யறிவினை விளக்கிப் பதம்பணிந் துய்யுநா ளுளதோ, தருவடர் பூங்கா வனமுயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (சுஉ)

செந்தினை காக்குஞ் சிலையர்தம் மகட்குச் சீர்குலைந் தேக்கறுத் திருந்த, கந்தனைப் பயந்த கருணையங் கடலே கடிமணங் கமழுநின் கழற்கு, வந்தனை புரிவா ரினத்துடன் கலந்து மகிழ்வுற வேத்துநா ளுளதோ, சந்தகி ளிரம்ப முளைத்தெழும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௬௩)

மனைவியர் மக்கண் மானில வாழ்வு மற்றுநற் பேறுட னாதி, நினை வொழி கனவே யாகுமென் றுணர்ந்து நிமிடமுங் கைவிடா தயரும், வினையினைக் கடக்க வருமவ ரோடு விதியறிந் தணுகுநா ளுளதோ, தனையளந் திடற்கு முடிவிலாப் பிரணவ சைலனே போரிவாழ் பவனே

அத்தமுஞ் சொல்லு மரனெனப் படுவா ரகங்குழைந் தேத்துவார்க் குரிய, வித்தக மணியே விமல னற்சோதி வேதவே தாந்தநின் கழற்கீழ்ப், பத்தனாப் பணிந்து முத்தியை யடையப் பக்குவ மடையுநா ளுளதோ, சத்தசா கரங்க டவழ்ந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௬௫)

வகையறி யாது படைத்திடு மயற்கு மதியினைத் தெளிவுறப் படுத்தித், திகையெலாம் வியக்கக் குடிலையின் பொருளைச் சிறப்புறச் செவிமடுத் தாங்கே, நகைபுரிந் தினிய மகிழ்வுறு நினது நாமமே நவிற்றுநா ளுளதோ, தகைமிகுந் தொண்டர் சூழ்ந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௬௬)

மடிதவழ் குமர னுச்சிமோந் தினிய மலர்ப்பதங் கண்ணினி லொத்திப், பொடியினைத் துடைத்துக் கடிதினி லணைக்கும் புனித வம்பிகை யொடு நீங்காப், பிடிபடு முனையே கனவிலு மறவாப் பிணைபடப் புகுத்துநா ளுளதோ, சடிலநன் முநியோர் சூழ்ந்தொளிர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௬௭)

அஞ்சிவந் துன்பாற் றஞ்சமென் றடைவா ரருவினை யறவே யொழிக்கும், நஞ்சிவ மென்ன வளர்ந்திடும் பரம நாடொறும் வழிவழித் தொண்டுசெய், குஞ்சித பாதஞ் சிரக்கணி யாகக் கொண்டிட வருளுநாளுளதோ, சஞ்சித மொழித்த விபுதர்சூழ் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (சூஅ)

எழுபதி விரட்டியொ டறுபதி னாயிர வெள்ளமுஞ் சூரனுமேகக், கொழுவிய தசைவேல் கரத்தினிற் கொண்ட குமரனைத் தராவிடி லமரர்க், கெழுபத மேதென வுனைவலம் வருவா ரினத்துடன் சேர்க்குநாளுளதோ, தழுதழுப் புறவே துதிபுரி பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

நற்றவ விரதப் பத்தியிற் சிறந்த நலங்கிளர் ருத்தமத் தோங்குங், கற்றவர்க் கிரங்கிக் கிருபைசெய் தாண்ட கறைமிடற் றண்ணலை மறவாக், கொற்றவர்க் குரிய வரமரு ணினது குரைகழல் வழுத்துநாளுளதோ, தற்செய லாக வளர்ந்தெழும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

சரணமே கதியென் றுனைவழி படுவார் சகலதீ வினைகளும் பொடியக், காணமா நின்றருளிர் கடவுளே சிறிதுங் கடைக்கணித் திடாயே லெற்குத், திரணமு மொழியா தெனமுறை யிடுவோர் சீரெனக் கருளுநா ளுளதோ, தரணியின் மிகுபே ரோங்கிய பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (எக)

பிரணவ வடிவாய் விளங்கு மைங்கரனும் பேதமை யாலய னறியாப் பிரணவ முணர்த்து மாறுமா முகனும் பிரணவ ரூபமு மதனால், பிரணவா லயமும் பெற்றிடு முனையே பிரியமோ டேத்துநா ளுளதோ, சரணர்மீ துலாவ வளர்ந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

வரநதி தவழுஞ் செஞ்சடா டவியு மத்தகக் கண்ணுமுன் மருவினோ ய், சாபமாய் நின்று நரநகா யுதனைச் சங்கரித் தடலடக் கியவுன், மரப தன்வகையை யெடுத்தெடுத் துரைத்து மதியிலேன் வாழுநா ளுளதோ, தரமதி லோங்கி யுயர்ந்தெழு பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

பரிசன முறுபேர் நிரம்பிய முழக்கும் பத்தியாய் வலம்வரு வார்கள், துரிசற வரகர வெனும்பே ரொலியுஞ் சுத்தோ ததியென வார்க்கும், பரிசினைச் செவிமடுத் தெக்களிப் புறுவோர் பரிவெனக் கருளுநா ளுள தோ, தரிசனங் காட்ட வளர்ந்தெழும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (எச)

பாவகாரியமாம் பல்லுயிர்ச் சுடலைப் பண்டியை வளர்த்திட வார் வக், கேவலத் துய்க்கு நெறியிலார் தமக்குக் கிட்டுமோ சிவகதி யென் னச், சீவகாருண்ணிய முறுபவர் தம்மொடு சேர்பட வொழுகுநா ளுள தோ, சாவமுன் வேள்வி தகர்த்தருள் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (எரு)

கட்டுக் கடங்காப் பிடாரிதன் மாட்டுக் கலந்துற வாடுத லொக்க, மட்டுக் கடங்கா மனைவியின் வாழ்க்கை மணம்பெற விலையென மதித் து, விட்டுப் பிரிதல் நியாயமென் றுணர்த்தும் வியனுரை தெளியுநா ளுளதோ, தட்டுக் கொட்டுகள் சதாவமர் பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (எசு)

நனிவிலா சனைப்படுஞ் சிறியதெய் வங்க ளைட்பெண யூகியா தவர்க் குக், கனிவிலா மாற்றுந் தாய்வசப் படுமகார் கன்றிய வாதர வாமெனப், பனிநிலா வெறிக்கு நின தருட் கமலம் பற்றியே வாழுநா ளுளதோ, தனி விழா வென்றும் விளங்குறும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

குன்றுதோ றாடுங் குமரனே யென்னக் குதுகல மடையவே மகிழ்ந்து, மன்றுளே யாடுஞ் சிற்றம் பலவன் மனமுவந் தளித்ததோர் செயலை, என்றுமே மறவா திறைஞ்சுநல் லடியா ரிணக்கமே பெருக்குநா ளுளதோ, தன்றுவா மகரோ டிருந்துவாழ் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (எஅ)

எண்பதாய் விளங்குந் தேவதை கட்கிங் கிருப்பிட மாமென வுரைக்கும், பண்பதா முருத்திர தாரண விதியைப் பற்றிடச் சற்றுமே தகவில், உண்பதே தொழிலா யுறங்குவே னங்ஙோ வுள்பொரு ளறியுநா ளுளதோ, சண்பக வல்லி படர்ந்துயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (எகூ)

நற்குடி பிறவா நங்கையர்க் கென்று நாற்பெருந் தன்மையே தெனவும், புற்குணந் தணவா தலமுறு வார்போற் புறமதத் தவர்க்குயர் வளிக்கும், தற்பரன் கிருபை யேதென வறியுந் தன்மையை யடையுநா ளுளதோ, சற்குணத் தவர்கள் வலம்புரி பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

நயபய மறியாத் தீதயர் மாற்ற நல்குபா தகருடன் வாழ்தல், சுயநலங் கருதுவோ ருறவொக்குந் துணையெனக் கைவிடத் தெளிந்த, புயபல முறுவோர் தமைமற வாத புந்தியை விளக்குநா ளுளதோ, சயமுற நாளுங் கிருபைசெய் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அக)

முன்றவப் பயனுய் வந்ததன் கணவன் முன்னுரைக் கிணங்குத லின்றிப், பன்றியி னுழலு மவர்வழிப் படுவோர் பலன்றரு நூல்களைக் கல்லா, நின்றழல் புகுமஞ் ஞானமே வெறுக்கு நிலைத்தயே றெய்துநா ளுளதோ, தன்றவப் பேற்றால் வலம்வரும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அஉ)

நீற்றினைத் தாங்கி நின்மலன் கண்மணி நிமிடமும் பிரிகிலா தணிந்து, கூற்றினை யுதைத்த பரஞ்சுடர் மநுவைக் கூறிடும் பழக்கமே கொள்ளும், பேற்றினை யடைந்த சீரியர் காற்கீழ்ப் பேறுறப் பெறுகுநா ளுளதோ, சாற்றினாற் பிழிநற வாடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அ௩)

காற்றினான் மழையாற் கனவிரு ளிடியாற் கயவர்த முறவினால் வெள்ளத், தாற்றினாற் பொல்லா விலங்கினா லியம னாற்றொறுணைக் கால படரால், தோற்றிடும் வெருவந் தன்வழி சேர்க்காச் சோதியென் றேத்துநாளுளதோ, சாற்றிய மறையோர் தாழ்ந்தெழும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அ௪)

மாட்டையே மேய்த்து மூண்டவீட் டுறியின் மத்தணி யுருக்கும்வெண்கட்டி, எட்டை யுந் தயிர்பால் கவர்தலோ டிடைச்சி யிளம்பிடி யாருடன் முயங்கும், நாட்டமே யுறுமாற் கருளிய கடைக்கண் ணாட்டமே திரும்புநா ளுளதோ, தாட்டுணை பிரியார் வலம்புரி பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அரு)

கருவினி லமையர்க் கருணைசெய் கயற்கண் கவின்றரு பார்ப்பதி யுடனே, கருவிலி யாகு நினதருட் கமலக் கழலிணை சிரக்கணிந் தென்றும், பெருமிதங் கொளவே யுறுமடி யார்கள் பெருமையைப் புகழுநா ளுளதோ, தருமிக ணிறைந்த பேருயர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அசு)

நந்தியம் பெருமான் பிரம்படிக் கொதுங்கு நாரண னாதியர் யாவும், பந்தியாய் நின்று வந்தனை புரியும் பதமலர்க் குவந்திடு மடியேன், சிந்தியா மனம்போ லுழலுவ தென்கொல் சிறியனேற் கருளுநா ளுளதோ, தந்தியும் புலியுந் தயங்கிடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

நந்துறைகைத் தலத்தோ னான்முகன் வலாரி நார்பிரான் வருணனோ டியமன், இந்துவா னுதய னிருதியீ சான னெரியெலி யாதியர் நாளும், கொந்தலர் கொடுபூ சனைசெயப் பெறுநின் குறிப்புணர்ந் துய்யு நா ளுளதோ, சந்திரன் முடிமேற் றவழ்ந்துலாம் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அஅ)

தொண்ணூற் றொன்பது தொண்டரைக் காக்கத் தூயபைந் தமிழி னூற் பாடப், புண்ணூற் றுதிர மோடவே வேலாற் பூதமெய் நலமொ ழித் தாண்ட, பண்ணூ லிசைக்குங் கந்தனைத் தந்த பாமவெற் கருளு நா ளுளதோ, தண்ணூற் றுயர்பெருக் கானிறை பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (அகூ)

நஞ்சினை யருந்தித் திரிபுர மெரித்து நானூற வேள்வியை யவித்துத், துஞ்சிடக் செய்யுங் காலனை யுதைத்துத் தூயபல் விதமெலாம் புரிந் தும், அஞ்சலென் றியார்க்கு மனுக்கிர கஞ்செய் யானென வழுத்துநா ளுளதோ, தஞ்சமென் றுறுவோர் வலம்புரி பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (கூ0)

மாலய னாதி காலனன் குணர்ந்து வழிபடற் கேதுவாய் நின்ற, சால வும் வேண்டும் வரமெலாந் தந்தா டனிப்புகழ் கண்டுகண் டுவக்க, கோ லமார் நினையே சினகரம் புகுந்து குரைகழல் பரவுநா ளுளதோ, தாலமா யிரவன் புகழொணாப் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (கூக)

பொன்மணி மக்கள் சுற்றநெல் லடிமை புகழிரா சாங்கநற் சிவிகை, முன்வினை யால்வரு மட்டவைஸ் வரிய முற்றுமே நல்குநின் கருணைத், தன்வழி காட்டும் பங்கயச் சரணச் சார்பெனக் கருளுநா ளுளதோ, சன்மமுற் றிடுபழி யொழித்தருள் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

உமைதரு முருக னின்றிரு விழாவி லுயரலங் காரமோ டுன்பால், அமைதலே யன்றி யைங்கர னென்று மவணிலா தேகுவ போலென், சுமைகழித் திடாயுன் மக்களி லெனைவஞ் சித்தமை சொல்லுநா ளுள தோ, தமைநிகர் பெரியர் வலம்வரும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௩)

செந்துவர் வாய்நல் லரிவைமாட் டுழன்று திகழ்முலைக் கடிதட மேய்ந்து, பைந்துணர் கலவை மேற்படிந் திருந்து பைதலைக் கொள்பவப் பணிகள், சிந்துவ நொடியி லுன்பெயர் செப்புமுன் செயலினை யுணருநா ளுளதோ, சந்துமந் தாரஞ் சூழ்ந்தமர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (௩௪)

நல்வழி காட்டுஞ் சைவசித் தாந்த நற்பயிர் வளர்த்திடு மேலோர், பல்வழிக் காட்பட் டவர்பணி யாவும் பரிந்துவந் தியற்றிடு மார்க்கச், செல்வழி காட்ட வழித்துணை யாநின் சின்மய மடையுநா ளுளதோ, சல்லிய மிலாதார் சூழ்ந்திடும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே.

திருவல கிட்டுத் திருவிளக் கேற்றுந் திருப்பணிசெய்யுமெய்ஞ் ஞானத், திருவருள் சுரக்கு நினதருட் செல்வத் திருப்பத மிறைஞ்சுமெய் யடியார், திருவடி தோய்ந்த நிலத்தினிற் புரளுஞ் சீர்பெற வாய்க்குநா ளுளதோ, சருவமு மடைவார் வலம்வரு பிரணவ சைலனே போரி வாழ் பவனே. (௩௬)

தாரக முணராத் தயங்குறு மயனைத் தனிச்சிறைப் படித்தியு முதைத்த, கோரகை யடியாற் படப்பணித் திடாயேற் குறைசொல வருவதோ டந்தோ, பாரக மதனிற் பழிவரு முனக்கே பாலனைக் காக்குநா ளுளதோ, சாரக விழிவாற் சரேலெனும் பிரணவ சைலனே போரி வாழ்பவனே. (௩௭)

விண்முகத் தேவ ராதியர் நின்று மீன்றலை சுமத்தலா தியவுஞ், சண்முகத் தேவா சகிக்கிலே மெனவே சரண்புகு வார்க்கருண் மாற்றம், மண்முகத் தவர்கள் வியந்துரை சிரமேல் வகித்திட வாழுநா ளுளதோ, தண்முகத் தேதுதித் தேத்துறும் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (கஅ)

நூற்றுக் கணக்கா மலங்கா ரத்து னுழைக்கவு முடிவிலா தோங்குங், கூற்றுக் கடங்காப் புகழினைத் துதிக்கக் கொள்வது வியப்பினும் வியப்பே, சோற்றுத் துருத்தியை நம்பிவா ழெற்குத் துணைசெய வருளுநா ளுளதோ, தாற்றுறு பூங்கா வனமடர் பிரணவ சைலனே போரிவாழ் பவனே. (கக)

சரிகுழல் வள்ளி யிணங்குரு தேகுந் தொடர்பினுக் கேங்கிய விளவல், கரிமுகா வெனவே யெதிர்படப் பயந்து சந்தனை வந்தணைந் துவக்கும், பரிபவ மிலாத வலவொடு தொழுநின் பதமல ரேத்துநா ளுளதோ, சரியெலா மடியார் வலம்வரும் பிரணவ சைலனே, போரிவாழ் பவனே.

## வாழி—வெண்பா.

வாணிதிரு மாலயனூர் மாமநு நீ றக்கமணி
பூணியான் றேவியிரு புத்திரர்கள்—மாணினுயர்
வல்லவிக னற்றொண்டர் மன்னுதமிழ் போரிமலை
செல்வமுடன் வாழ்க சேர்ந்து.

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



# சிறப்புப்பாயிரம்.

சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-மணி-திருநாவுக்கரசுமுதலியாரவர்களியற்றிய

## அறுசீர்விருத்தம்.

ஓங்குபிரணவசைல முற்றொளிர்பா லாம்பிகையா
ளுமைக ளிக்கத்
தேங்குசுவை நிரம்புபதிற் றந்தாதி வணப்பொழுகத்
தெளிவிற் சொற்றான்
மாங்குயில்கள் பாட்டோவாப் புழலைநகர் வேளாளர்
மரபில் வந்தோன்
தாங்குபுகழ் பண்டிதராத் நந்திருநா வுக்கரசாந்
தமிழ்வல் லோனே.

உ

சிவமயம்.

# திருப்போரூர்ப்பிரணவசைலம்

தியாக கைலாச நாதரிடமமர்

# ஸ்ரீபாலாம்பிகையம்மைமீது

# பதிற்றுப்பந்தாதி.

---

காப்பு

வெண்பா.

உலகமகிழ்ந் தேத்தநம்பி யுய்யமுளைப் பைங்கூழ்
நிலவுநடும் பள்ளியனாய் நின்ற—வலவனிடப்
போரூர்ப்பா லாம்பிகைத்தாள் போற்றுபதிற் றந்தாதி
காரூர்க் கடக்களிறே கா.

நூல்

வெண்பா.

மன்னுமயன் மான்முதலோர் மாநிலத்திற் கோயிலிரீஇத்
துன்னுமகிழ் வாற்றுதிசெய் தொன்மையனே—முன்னர்மணம்
பண்ணுதிருப் போரூர்வாழ் பாலாம் பிகைமலர்த்தாள்
எண்ணிவழி பட்டுய்வ னே. (க)

கட்டளைக்கலித்துறை.

எய்து முயர்பா வத்து விதமெனு மின்பமுத்தி
யுய்த றருமண் ணவர்விண் ணவர்பண் ணவர்க்குறுதி
செய்தன் முறையாந் திறனைத் தெளிந்து திகழ்போரியின்
மெய்திகழ் பாலாம் பிகைக்கழ லேத்த வியன்றருமே. (உ)

### வெண்பா.

வியன்றருமே லாங்கடைக்கண் மேற்படா தென்றும்
பயன்றரலே தென்னுமுடன் பாட்டின்—முயன்றவர்கள்
பற்றுதிருப் போரிநகர் பாலாம் பிகையம்மையை
முற்றுமற வாதிருக்க முந்து. (ரு)

### கட்டளைக்கலித்துறை.

முந்தி யிடையூ றுடைப்பவ னருகும் முன்னவற்சேர்
செந்துவர் வாய்ச்சித்தி புத்தியு மேலாய்த் திகழ்ந்திடவே
வந்தித் திடவுயர் மாமியாப் போரி வளநகரிற்
சிந்தித் திடவுறும் பாலாம் பிகையினைச் சேருதுமே. (சா)

### வெண்பா.

சிந்தா மணியாநற் றெய்வசி காமணியின்
பைந்தார் துணைவியே பார்புரக்கு—நந்தா
மலரடிக்கே யன்பினராம் வாழ்வுதவும் போரூர்த்
தலமுயர்பா லாம்பிகைநற் றாய். (ரு)

### கட்டளைக்கலித்துறை.

தலத்திற் கியையா வொழுக்க மிகவே சமயநெறி
நலத்திற் குடன்பா டிலாத வழியினை நன்குணர்ந்து
குலத்தைக் கெடுக்கும் பதகரைச் சாராக் குணமருளும்
வலத்தி லுயர்போரிப் பாலாம் பிகையெனும் வானமுதே. (சா)

### வெண்பா.

வனசமலர் மீதுறையும் வாணிபொருட் செல்வி
சினசனிற்கு வந்திடுமால் சேய்க—மனசனுடன்
கந்தமலர் கொண்டுசொரி காமருலாம் போரிநகர்
வந்தனைபா லாம்பிகையே வா. (எ)

கட்டளைக்கலித்துறை.

வாணியல் காட்டும் பொருப்பியல் காட்டும் வளம்பிடிகட்
கானியல் காட்டி மகிழ்வுறும் போரிக் கதிபதியாய்
மானியல் காட்டு மறுமுகன் பாத மலர்விழியின்
பாணியல் காட்டிப் பொருந்திடும் பாலாம் பிகையருளே. (அ)

வெண்பா.

பாலாம் பிகைபமைதண் பாதநிழற் கீழ்வேத
நாலா முகனரியு நாண்மலர்கொண் — டாலால
முண்டவன்வாழ்க் கைத்துணையென் றோதவாந் தந்தருளுந்
தண்டலைசூழ் போரியினைத் தாழ். (கூ)

கட்டளைக்கலித்துறை.

தாழ்சடை நீண்முடி கங்கை மதிதவழ் சங்கரன்றன்
வீழ்கணக் காயர் மகுட மனவில மெய்யுரிஞ்ச
வாழ்கடன் மேதினி யாவு மிறைஞ்சுபு வாற்றலுறும்
பேழ்வளப் போரியின் பாலாம் பிகையருள் பேதையற்கே. (ய)

வெண்பா.

பேதமையாற் பெற்றிடும்பெண் பேதைமைக்காட் பட்டுநிதம்
வேதனையா லுற்றதுயர் வேண்டாவே — யாதனையில்
வாரா வரத்துய்க்கா வாழ்வளிக்கும் போரிநகர்த்
தாரார்பா லாம்பிகைநற் றாள். (யக)

கட்டளைக்கலித்துறை.

தாரா கணந்தவழ் தாரகமாமலை சார்ந்தவர்க்குத்
தாரா கணமு மிகுபட ராதி தராதலத்துத்
தாரா தரமனை பூங்குழன் மாதுமைத் தாள்பணியத்
தாரா ருராமுயர் பாலாம் பிகையைச் சரண்புகுமே. (யஉ)

வெண்பா.

சரவணம டைந்தறுவர் தம்பான்மாந் திட்ட
சரவணனைத் தந்தசுரர் சாய்த்தக்—குரவனுயர்
போரிப் பிரணவமாம் பொங்கருலாம் வாழ்வெணக்கு
நாரிப்பா லாம்பிகையே நல்கு. (மங)

கட்டளைக்கலித்துறை.

நல்கு மிகபர வாழ்விற் குறுதுணை யா நற்கல்வி
மல்குஞ் சிவனடி யாருயர் பத்தி வளம்பெருக
வெல்கும் புறமத மாற்ற லடங்க வியன்போரியிற்
செல்கு முயர்தரு பாலாம் பிகையருள் சித்திக்குமே. (மச)

வெண்பா.

சித்தவிலா சத்தமுந்துஞ் சிற்றறிவு பெற்றமனஞ்
சித்தசுத்தி யாவதெவன் சித்திரவி—சித்திரமார்
நற்போரி மாநகரை நாடிப்பா லாம்பிகையின்
பொற்போடுந் தாளிணையைப் போற்று. (மரு)

கட்டளைக்கலித்துறை.

பொற்பினி லெய்திய விற்பனர் முன்னர் பொருந்தியவான்
வெற்பினின் மிக்க பிரணவ சைலம் விளங்குதிரு
வெற்பணி யாகந் தரித்தவர் வாம விடமமருஞ்
சிற்பரை யாந்திருப் போரிப்பா லாம்பிகைத் தெள்ளமுதே.(மசு)

வெண்பா.

சிற்றிரைக்கே நாடோறுஞ் சிற்றுணர்வாற் சிற்றின்பச்
சிற்றினத்துச் சிற்றடியேன் செய்குறைக்கே—மற்றுமொரு
குத்திரமில் லாதுழல்வேன் றன்பகலப் போரிநகர்க்
காத்திடுநம் பாலாம்பிகை. (மஎ)

கட்டளைக்கலித்துறை.

கையறை யாளர் வகுத்திடு மாறு கவிதைசொல்லிக்
கையரை வாழ்த்தி மகிழ்வுறுங் கட்டுக் கதையினையிவ்
வையரு மேற்கா திகழ்ந்துரை யாடுபு வல்வினையை
நைய வகைசெயும் பாலாம் பிகைகழ லுடுமினே. (௰௮)

வெண்பா.

நாடுநகர் கூடுபொரு ணன்மனைவி வாழ்மக்கண்
மாடுமனை நீடுபுகழ் வாய்க்கநிதம்—பாடுபட்டுத்
தேடுவதேன் போரிநகர்ச் சென்றுபா லாம்பிகையை
நாடுமுனம் பெற்றிடலாம் நாம்.

கட்டளைக்கலித்துறை.

நாடி வருவார்க் குறுதுணை யாக நலந்தருபொற்
பீடிகை யாகக் கொளவருந் தொண்டர் பிரியமுட
னாடித் தியாகைகை லாசநா தன்ற னமலையெனப்
பாடி மகிழ வரமருள் போரூர்ப்பா லாம்பிகையே. (௨௰)

வாழி வெண்பா.

பாரதிபொன் பூதிமணி பஞ்சாக்ரந் தொண்டரயன்
சாரதிமால் செய்யதமிழ் சண்முகவேள்—தாரமுடன்
சோதியுமை நால்வாயன் றொன்மைதிருப் போரிநகர்
ஆதியவும் வாழ்க வமர்ந்து

முற்றிற்று.

சிவமயம்.

# திருப்போரூர்-சண்முகப்பெருமான்
# பஞ்சகக்கொச்சகம்.

---

முருகாவென் றழைக்குமுன மொய்குழலார்க் கருளியமான்
மருகாவென் றொருசிறிதும் வல்வினையா லகங்குழைய
உருகாதுன் றனைமறந்திங் குழலுமெனை யேவருத்த
வருகாலற் கேதுரைப்பேன் மகிழ்போரூர் சண்முகனே. (க)

மயிலகவுங் குயினவிலு மணமிகுதண் பொழிலுலவும்
அயிலனைய நயனமுறு மரிவையர்தந் தலைவரொடு
பயிலிடமெங் கணுமுயர்நின் பதியைநினை யாதெனக்குத்
துயிலவரும் போதெனைநீ சூழ்போரூர் சண்முகனே. (உ)

பதம்பணியு மடியரெலாம் பரிந்துவக்கப் பாடியநற்
சிதம்பரமா முனிவரர்தஞ்செயலனைத்துமுயர்சைவ
மதம்பரவ நிலவிடுநின் மலரடியைச் சிரக்கணிய
நிதம்பரவ வரமருள்வாய் சீர்போரூர் சண்முகனே. (ங)

வல்லசுரர் தமைநொடியில் வடிவேலுக் கிரைப்படுத்திச்
சொல்லமரர்க் கருள்புரிந்த தூய்மைதவ முயர்குமரா
நல்லவர்க ளடியநின் னறுமணமார் பொன்னடிக்கீழ்
அல்லலறுத் திடச்செய்வா யரும்போரூர் சண்முகனே. (ச)

வெள்ளிமலை தனின்மருவும் விமலனருள் சிவகுமரா
வள்ளிதெய்வ யானையுடன் மணமவிரும் வேன்முருகா
புள்ளிமயின் மீதிவரும் பொற்பதங்கண் டேத்திடநான்
உள்ளிவரும் படிச்செய்வா யுயர்போரூர் சண்முகனே. (ரு)